முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1134

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.11.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மனாய் வாழுகின்ற அரங்கனே
தரணியை காக்க வந்த தேசிகனே
ஆறுமுகன் என் சூட்சுமமே அண்ணலே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
விளம்பிடுவேன் சுபகிருது துலைதிங்களில்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 ம் நாள் 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஞானவான் உன் சேவைகொண்டே
நன்மைகள் உலகில் நடக்க இருக்க
3. இருக்கவே உன் மார்க்கம் தெரிந்தவர்கள்
இந்த உலகில் தேற்றம் பெறுவது உறுதியப்பா
கருத்தாக உன் உபதேசம் ஏற்று விட்டால்
கடைத்தேற்றம் மக்கள் அடைவர் சடுதி
4. சடுதி இந்த உலகமே மாற்றம் பெற
சரணாகதி கொண்டு உன்னை நோக்கி
தடைஇன்றி உலகோர் வருதல் வேண்டும்
தவசி நீ தருகின்ற உபதேசத்தை
5. உபதேசத்தை ஞானமாக வேதமாக
உயிர்காக்கும் உண்மை மார்க்கமாக
தயவாக உலகோர் ஏற்றுவிட்டால்
தரணிக்கு மாற்றம் சடுதி சடுதி
6. சடுதி இந்த அற்புதத்தை நிகழ்த்தவே
சடாட்சரன் யான் உன்னுள் இருந்து இயக்குகின்றேன்
இடரின்றி உன்மார்க்கம் வளர்ந்தால் போதும்
இந்த உலகமே ஞான லோகமாகுமப்பா
7. தடையின்றி உன்னை ஏற்றால் போதும்
தரணியோர்க்கு சித்தி உறுதியாகும்
ஆகவே உன்னுள் இருந்து தீட்சையில்
அறமும் அன்னதான சேவையுமாக
8. ஆறுமுகன் யான் உலகில் நடத்திவர
அப்பனே உன்னை அறிபவர்க்கு
அழியாமை எனும் சக்தி
உயர்வாக கிட்டி இனிதே

9. மண்ணுலகில் அவர்களெல்லாம் ஞானிகளாகி
மகான் உன் விருப்பம் வழி
ஞான ஆட்சி உலகம் அடையக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–